**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**10 |
| Name | : | **கலையரசி** |
| Father's / Husband Name | : | கோபிநாத் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 40/2025 |

**தேதி : 05.03.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி வசந்தியை தெரியும். அ.சா.9 ஐ தெரியும். எதிரியின் வீடு எனது வீட்டிற்கு நான்கு வீடு தள்ளி அமைந்துள்ளது. எதிரி போட்டோ ஸ்டூடியோ வைத்திருந்தார். எதிரி தனது போட்டோ ஸடூடியோவை திரும்ப எடுத்து நடத்துவதற்காகவும், குடும்ப செலவிற்காகவும் என்னிடம் லோன் எடுத்து தருமாறு கேட்டார். நான் மகளிர் குழுவிலிருந்து ரூ.50,000/- லோன் எடுத்து கொடுத்தேன். கடன் தொகையில் 12 தவணைகள் எதிரி தொகையாக செலுத்தினார். பிறகு தனது தங்கையின் மருத்துவ செலவிற்காக என்னிடம் பணம் கேட்டதால் பாடாலூர் எல்.என்.டி நிதி நிறுவனத்திலிருந்து ரூ.55,000/- லோன் வாங்கி கொடுத்தேன். **எல்.என்.டி நிதி நிறுவனத்தின் கடன் கணக்கு புத்தகத்தின் நகல் அ.சா.ஆ.40 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பிறகு துறையூர் கிராம சக்தி நிதி நிறுவனத்திலிருந்து ரூ.40,000/- வாங்கி கொடுத்தேன். **கிராம சக்தி நிதி நிறுவனத்தின் கடன் கணக்கு புத்தகம் நகல்**

**அ.சா.ஆ.41 ஆக குறியீடு செய்யபப்படுகிறது.** எதிரி மூன்று தவணைகள் செலுத்திய பிறகு நிதி நிறுவனத்தினர் மீதி தவணைகளை கட்டுமாறு என் வீட்டிற்கு வந்து கேட்டார்கள். எதிரிக்கு வாங்கி கொடுத்த லோன் தொகைகளுக்கான தவணை தொகைகளை நான்தான் செலுத்திவருகிறேன். பிறகு எதிரியை தொடர்பு கொண்டபோது அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை. எதிரி வீட்டிற்கு சென்று பார்த்தபோது வீடு பூட்டியிருந்தது. எதிரி இதேபோல் பலரிடம் கடன் வாங்கியிருப்பதாக அப்போதுதான் எனக்கு தெரியவந்தது. பின்னர் இது சம்மந்தமாக சத்தியா என்பவர் குற்றபிரிவில் புகார் அளித்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

வசந்தி எனக்கு உறவினர் இல்லை. பக்கத்து வீட்டுக்காரர். முதல் லோன் மகளிர் சுய உதவி குழு மூலம் ரூ.50,000/- எடுத்து கொடுத்தேன். மேற்படி மகளிர் குழு லோனில் 12 தவணைகள் செலுத்தியுள்ளார். பிறகு எல்.என்.டி நிதி நிறுவனத்தில் பெற்ற ரூ.55,000/- கடன் தொகையில் 8 தவணைகள் செலுத்தியுள்ளார். பிறகு கிராம சக்தியில் பெற்ற தொகை ரூ. 40,000/-ல் 3 தவணைகள் கட்டியுள்ளார். எதிரி என்னை திட்டமிட்டு ஏமாற்றவில்லை என்றாலும், கடன்கொடுத்தவர்கள் அனைவரும் காவல் நிலையத்திற்கு சென்றதால் நானும் சென்றேன் என்றால் சரிதான். எதிரி என்னை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் கடன் பெறவில்லை என்றாலும் சூழ்நிலை பொறுத்து அவரால் செலுத்தமுடியவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி மீண்டும் தவணை தொகைகளை செலுத்தினால் எனக்கு சம்மதமா என்றால் சம்மதம்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.

Judicial Magistrate No.1
Perambalur.